## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி

முன்னிலை செல்வி.ஆர்.கமலாவதி, பி.எஸ்.சி.,பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி

2017-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாள் திங்கட்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2017

கே.ஜோதி

...மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி

..எதிராக..

1.சி.கிருஷ்ணன்

..எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

WEB COPY

2) சார்பதிவாளர், கிருஷ்ணகிரி

3) மாவட்ட பதிவாளர், கிருஷ்ணகிரி

4) மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி

...எதிர்மேல்முறையீட்டாளர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள்

அசல் வழக்கு 109/2008ல் 14.12.2015 அன்று கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பும் தீர்ப்பாணையையும் ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இடையே:

சி.கிருஷ்ணன்

..வாதி

மற்றும்

1)கே.ஜோதி

2)சார்பதிவாளர், கிருஷ்ணகிரி

3)மாவட்ட பதிவாளர், கிருஷ்ணகிரி

4)மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி

..பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடானது 05.04.2017ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திருவாளர் பர்கூர்.எ.அசோகன் அவர்களும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் எ.மாரியப்பன் அவர்களும் ஆற்றிய இருதரப்பு வாதுரையை கேட்டும் முன்னிடப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்:

## தீ ர் ப் பு ரை

தாவா சொத்து வாதிக்கு உரியது என்று விளம்புகை செய்யக் கோரியும், 1ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ தாவா சொத்தில் அத்துமீறி நுழையவோ அல்லது தாவா சொத்தை அடமானம் வைக்கவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாவா செலவுத்தொகை கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

<u>வழக்குரை சுருக்கம்:</u>

2) வாதி 1ம் பிரதிவாதியை 24.3.1991ல் திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தனர். 25.05.1983லிருந்து வாதி ராணுவ பணியில் இருந்து வருகிறார். 4.4.1996ல் வாதியின் வருமானத்தைக் கொண்டு ரூ.50,000க்கு ஒரு காலி இடத்தை 1ம் பிரதிவாதியின் பெயரில் வாங்கினார். 2003ல் கடன் ரூ.2 லட்சம் பெற்று வீடு கட்டினார். 1ம் பிரதிவாதி, வாதியின் வருமானத்தைக் கொண்டு சரியாக குடும்பம் நடத்தவில்லை. ஆனால் வாதி, 1ம் பிரதிவாதிக்கும் அவரது குழந்தைகளுக்கும் பராமரிப்புக்காக வருமானம் எதுவும் கொடுப்பதில்லை என்று வாதி மீது புகார் கூறி கடிதம் ஒன்றை ராணுவத்திற்கு அனுப்பினார். இந்நிலையில் 1ம் பிரதிவாதியின் நடத்தையின் மீது வாதிக்கு சந்தேகம் ஏற்பட்டு, விசாரித்தபோது 1ம் பிரதிவாதிக்கு ஒரு காமராஜ் என்பவருடன்

தொடர்பு ஏற்பட்டிருப்பது தெரிந்தது. மேலும் தாவா சொத்தை 3ம் தரப்பினருக்கு விற்பதற்கு 1ம் பிரதிவாதி முயற்சித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வீட்டிலிருந்த பொருட்களையும் பிள்ளைகளின் படிப்புச் சான்றிதழ்களையும் எடுத்துக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டார். தாவா சொத்து அவரது பெயரில் இருப்பதை கொண்டு விற்க முயற்சித்து வருகிறார். எனவே, வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சுருக்கம்:</u>

3) 1ம் பிரதிவாதிதான் தாவா சொத்தை அரசு ஊழியரான அவரது தந்தையின் உதவியுடன் வாங்கினார். மேலும் கிருஷ்ணகிரி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் அவரது சகோதரியின் துணையுடன் கடன் பெற்று வீடு கட்டினார். வாதி பல பெண்களுடன் தொடர்பு கொண்டு 1ம் பிரதிவாதியை வீட்டைவிட்டு துரத்திவிட்டார். மேலும் 1ம் பிரதிவாதியின் நடத்தை சரியில்லை என்று குறிப்பிட்டு அறிவிக்கைகளை கொடுத்தும் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தியும் கொடுமைப்படுத்தினார். எனவே, சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி விவாகரத்து மனு தாக்கல் செய்து 18.08.2008ல் வாதியிடமிருந்து விவாகரத்து பெற்றார். தாவா சொத்தில் வாதிக்கு எந்த உரிமையுமில்லை. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் ஒருதரப்பாகியுள்ளனர்.</u>

4) <u>வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கில் தீர்வு காண கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.</u>

1) தாவா சொத்து வாதியால் சுயார்ஜிதமாக 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டதா?

2) வாதி கோரியபடி தாவா சொத்தின்பேரில் விளம்புகை பரிகாரம் பெறத்தக்கவரா?

3) வாதி கோரியபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெறத்தக்கவரா?

5) வாதி தரப்பில் வா.சா.1 முதல் 4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு

WEB COPY

வா.சா.ஆ.1 முதல் 17 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் 3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பின்னர் இருதரப்பு வாதுரை மற்றும் வாய்மொழி ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்த கீழமை நீதிமன்றம் வாதியின் வழக்கை வாதி கோரியவாறு அனுமதித்து தீர்ப்பாணை வழங்கியுள்ளது.

6) <u>மேற்படி தீர்ப்பில் அதிருப்தியுற்ற 1ம் பிரதிவாதி இந்த மேல்முறையீட்டை கீழ்கண்ட காரணங்களுடன் தாக்கல் செய்துள்ளார்.</u>

இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 14(1)ன் ஆக்கக் கூறுகளை கீழமை நீதிமன்றம் முழுவதுமாக கவனத்திற்கொள்ள தவறியுள்ளது. ஏ.ஐ.ஆர்.1979 எஸ்.சி.993, 1987(3) எஸ்.சி.சி.674, 2015(3) சி.டி.சி. பக்கம் 316 போன்ற முன்தீர்ப்புகளை கீழமை நீதிமன்றம் கவனத்திற்கொள்ள தவறியுள்ளது. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் காலி மனையாக வாங்கப்பட்டு 1ம் பிரதிவாதி அடமானக் கடன் வாங்கி அதில் வீடு கட்டியுள்ளார். அனைத்து ஆவணங்களும் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது. ஆனால் கீழமை நீதிமன்றம், அனைத்து ஆவணங்களும் ரசீதுகளும் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்தாலும் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால் வாதியே தாவா சொத்தின் உரிமையாளர் உடமையாளர் என்று தவறாக தீர்மானித்துள்ளது. கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதரப்பானது. எனவே மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் கீழமை நீதிமன்ற தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்யப்பட்டு மேல்முறையீடு அனுமதிக்கப்படவேண்டும்.

வசதிக்காக மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளர் வாதி என்றும் மேல்முறையீட்டாளர் பிரதிவாதி என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

WEB COPY

7)மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:

1) தாவா சொத்து வாதியால் சுயார்ஜிதமாக 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டதா?

2) வாதி கோரியபடி தாவா சொத்தின்பேரில் விளம்புகை பரிகாரம் பெறத்தக்கவரா?

3) வாதி கோரியபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெறத்தக்கவரா?

4) மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

1,2ம் பிரச்சனைகளுக்கான பரிசீலனையும் தீர்வும்:

8) வாதி தரப்பில் வழக்குரை சொத்து வாதியால் அவருடைய வருமானத்தைக் கொண்டு பிரதிவாதியின்பேரில கிரயம் பெறப்பட்டது என்றும் கிரயம் பெறுவதற்கு முன்பு வாதியால் கிரய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றும் 1ம் பிரதிவாதி அவருடைய மனைவி என்பதால் அவர் மீதுள்ள அன்பினாலும் பாசத்தாலும் வாதி ராணுவத்தில் பணிபுரிந்து வந்ததாலும் 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரயம் ஏற்பட்டது என்றும் அதன் பின்பு வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து அடமானக் கடன் பெற்று வாதியே கடன் தொகையை செலுத்தி வந்தார் என்றும் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டு 1ம் பிரதிவாதி தனித்து பிரிந்து சென்றுவிட்டார் என்றும் அதன் பின்பு 1ம் பிரதிவாதி விவாகரத்து ஒருதரப்பாக பெற்றுள்ளார் என்றும் வழக்குரை சொத்தை 1ம் பிரதிவாதி விற்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதால் வழக்குரை சொத்து மலரணையாக 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரயம் பெறப்பட்டுள்ளதால் வழக்குரை சொத்து வாதிக்கு உரிமைப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று வாதுரைக்கப்பட்டது.

9) 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரை சொத்தானது 1ம் பிரதிவாதியின் பெற்றோரின் வருமானத்தைக்கொண்டும் அவருடைய நகைகளை விற்றும் கிரயம் வாங்கப்பட்டது என்றும் பிரதிவாதிதான் அடமானக் கடன் பெற்று கடனை அடைத்தார் என்றும் பொய்யான அவதூறுகளை வாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தி

WEB COPY

தினசரிகளில் விளம்பரபடுத்தியதால் 1ம் பிரதிவாதி வாதியைவிட்டுப் பிரிந்து சென்று விவாகரத்து பெற்றார் என்றும் குழந்தைகளையும் 1ம் பிரதிவாதி வளர்த்து வருகிறார் என்றும் வழக்குரை சொத்து வாதியால் கிரயம் பெறப்பட்டதல்ல என்றும் மலரணை பரிவர்தணை என்று கூறுவதற்கு வாதி தடை செய்யப்படுகிறார் என்றும் வாதுரைக்கப்பட்டது.

10) வாதி தரப்பில் மனைவி குழந்தைகள் பெயருக்கு சொத்துக்களை மலரணை செய்வதற்கு சட்டம் வழிவகுத்துள்ளது என்றும் அன்பு மற்றும் பாசத்தின் பேரில் வாங்கினாலும் என்னென்ன நோக்கத்துடன் வாங்கப்பட்டது எவ்வாறு அனுபவிக்கப்பட்டது யார் கடன் வாங்கினார் யார் கடனை செலுத்தினார் என்பதை கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும் என்று வாதுரை செய்து கீழ்கண்ட முன் தீர்வு முடிவு சுட்டிக்காட்டப்பட்டது.

WEB COPY

*IN THE HIGH COURT OF DELHI AT NEW DELHI*

*Yogita Dasgupta*

*vs*

*Kaustav Dasgupta*

*".. that the parties to the suit solemnized their marriage on 12.05.1999. The suit property was purchased through a sale deed executed on 6.12.2006, which reflected the appellannt as owner of the property........eventually their marriage was dissolved by mutual consent under section 13B of Hindu Marriage Act by order dated 5.7.2014...."*

*".......Section 3 of the Benami Act would show that in the first instance property acquired in the name of the wife is not deemed to be benami property – yet there is a statutory presumption in law that the property is for the benefit of wife. The expression 'unless the contrary is proved' clearly places the onus of proving that this property was*

*acquired not for the benefit of wife, upon the husband. It was urged that nowhere in the suit the plaintiff urged that the property though in the name of the wife was not for her benefit. Counsel emphazied repeatedly that the husband stated that the property was acquired in 2006'out of love and affection' for the wife..."*

மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்கில் இதேபோன்று கணவனால் மனைவி பெயருக்கு வாங்கப்பட்டு, அந்த இடத்திலிருந்து கணவனால் கடன் வாங்கி தொகை செலுத்தப்பட்டு மனைவி கணவனை விட்டுவிட்டு பிரிந்து விவாகரத்து பெற்று சென்றிருக்கும்போது அன்பின்பேரிலும் பாசத்தின்பேரிலும் வாங்கியதாக இருந்தாலும் குடும்ப உறுப்பினர் நலனுக்காக வாங்கியிருப்பதாக நிரூபிக்கப்பட்டிருப்பதால் அசல் ஆதாரம் வாதியிடம் உள்ளதும் இதர ஆவணங்கள் கணவனான வாதியிடமுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டிருந்தால் வழக்குரை சொத்து மனைவி பெயருக்கு இருந்தாலும் அது மலரணை கிரயம் என்றும் வாதிக்கு உரிமை என்றும் சந்தர்ப்ப சூழ்நிலையை வைத்து தீர்மானிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

10) 1ம் பிரதிவாதி தரப்பில் 2015 3 சி.டி.சி 316 என்ற தீர்முடிவு சுட்டிக்காட்டப்பட்டது.

*2015(3) CTC 316*

*IN THE HIGH COURT OF MADRAS*

*Shanthi @ Shanthi Sathya and others*

*vs.*

*M.Masanam*

*"..Benami Transactions (Prohibition) Act 1988 (45 of 1988), Sections 3(2) and 4 – Prohibition of Benami Transactions – prohibition of right to recover property held by Benami – Immovable property purchased in name of wife from and out of sale consideration provided by husband – Husband filed suit for declaration to declare title and recovery of possession – Husband*

*pleaded that property was purchased in name of his wife out of love and affection – Presumption thereto – person to succeed in claim or defence in suit on basis of Benami transaction in name of his wife , should plead and prove that purchase was not made for benefit of wife – Admission made by husband establishes that property was purchased for benefit of his wife – Husband is not entitled to recover property held by his wife –..”*

மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்கில் மலரணை பரிவர்தனை அடிப்படையில் மனைவியின் பெயருக்கு கிரயத்தொகை கொடுத்து கணவனால் வாங்கப்பட்ட சொத்துக்கு விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் கணவனால் அன்பின்பேரிலும் பாசத்தின்பேரிலும் மனைவி பெயரில் வாங்கப்பட்டதாக கூறியிருக்கும்போது கிரயமானது மனைவியின் நலனுக்கு வாங்கப்பட்டதல்ல என்று நிரூபித்தால் மட்டுமே அது மலரணை கிரயம் என்றும் கணவனின் ஒப்புதலானது மனைவியின் நலனுக்காக பெறப்பட்டிருந்தால் அது மலரணை கிரயம் அல்ல என்றும் மலரணை அடிப்படையில் விளம்புகை பரிகாரம் பெற உரியவர் அல்ல என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன் தீர்முடிவானது இரு நீதியரசர்களால் பிறப்பிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்முடிவானது ஒரு நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட தீர்முடிவாகும். மேலும், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்முடிவு 2016ல் பிறப்பிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்முடிவு 2015ல் பிறப்பிக்கப்பட்டது. 1ம் பிரதிவாதி தரப்பில் 1996 1 லா வீக்லி 608 என்ற தீர்முடிவு சுட்டிக்காட்டப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*1996-1-L.W.608*

*Arulmigu Visweswaraswami and Veeraraghava Perumal*

*Temples rep.by its Executive Officer, Tiruppur, Coimbatore District*

WEB COPY

*vs.*

*RVE.Venkatachala Gounder and another*

*"..Evidence/Practice, Eveidence Act S.34 – suit on title – duty of plaintiff to establish title – absense of title deeds or other document – Municipal Registers/Extracts, cannot be relied upon and accepted in order to prove title – Revenue records, evidentiary value of – scope.."*

மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்கில் வாதி உரிமை பத்திரமோ வேறு ஆவணங்களோ இல்லாதபோது நகராட்சி பதிவேடு மற்றும் ரசீதுகள் தாக்கல் செய்து அதனடிப்படையில் உரிமை கோர முடியாது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்கில் பிரதிவாதி கோவில் உரிமையாளராக இருக்கும்போது அதற்கு எதிராக வாதி வீடு கட்டி நகராட்சி பதிவேட்டையும் வரி ரசீதையும் தாக்கல் செய்த காரணத்திற்காக அது அவருக்கு உரிமைப்பட்டது என்று தீர்மானிக்க முடியாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏ.ஐ.ஆர். 1995 சுப்ரீம் கோர்ட் 2145 என்ற முன் தீர்வு முடிவு சுட்டிக்காட்டப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

*AIR 1995 SUPREME COURT 2145*

*Nandh Kishoe Mehra*

*vs.*

*Sushila Mehra*

*"..Benami Transactions ( Prohibition) Act (45 of 1988) Ss.3(2) 4(1)(2) – Prohibition to plea of benami – Not applicable to purchase of property by person in name of wife or unmarried daughter – However he has to prove that said property had not been purchased for their benefit in order to succeed..."*

மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்கில் மலரணை கிரயமானது மனைவி மற்றும் திருமணமாகாத மகள் பெயருக்கு ஏற்பட்டதை பொறுத்து பொருந்தாது என்றும் ஆனால் அந்த நபர் மேற்படி சொத்து மனைவி மற்றும் திருமணமாகாத மகளின் நலனுக்காக பெறப்பட்டதல்ல என்று நிரூபித்தால் மட்டுமே உரிமையாளர் என்று தீர்மானிக்க முடியும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு வழக்குகள் 1995, 1996ல் ஏற்பட்டுள்ளதால் இந்த வழக்கின் பொருண்மைக்குப் பொருந்தாது. எனவே உபயவாதிகள் சுட்டிக்காட்டிய தீர்முடிவின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட கிரயமானது வாதியால் மலரணையாக பெறப்பட்டதா? வாதியால் 1ம் பிரதிவாதியின் நலனுக்காக பெறப்படவில்லையா? என்பது ஆராயப்படவேண்டும்.

WEB COPY

11) வா.சா.1 வழக்குரையில் கூறியவற்றையே பிரமாண வாக்குமூலத்தில் கூறி குறுக்கு விசாரணையின்போது, 1ம் பிரதிவாதி உடன் பிறந்த சகோதரி மகள் என்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை அரசு வேலையில் இருந்தார் என்றும் 2008ம் ஆண்டே எனக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றுவிட்டார் என்றும் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே விவாகரத்து பெற்றுவிட்டார் என்றும் 1ம் பிரதிவாதி தனி நபர் என்ற நிலையில் அவருக்கு தாவா சொத்தில் உரிமை உண்டு என்றால் சரியல்ல என்றும் வா.சா.ஆ.1 1ம் பிரதிவாதி பெயருக்கு உள்ளது என்றால் சரிதான் என்றும் வா.சா.ஆ.1ன்படி 1ம் பிரதிவாதிக்கு முழு பாத்தியம் என்று சொன்னால் வா.சா.ஆ.1ல் கண்டுள்ளவாறு ரூ.27,000 ராணுவத்திலிருந்து நான் தொகை சேர்த்து வைத்தேன் என்றால் சரிதான் என்றும் என் மனைவிக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு பணம் அனுப்பினேன் என்று நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் வா.சா.ஆ.1ல் கண்டுள்ளவாறு ரூ.27,000ஐ 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல என்றும் வீடு கட்ட ரூ.2லட்சம் கடனை 1ம் பிரதிவாதிதான் பெற்றார் என்றால் சரிதான் என்றும் என்னுடைய சம்பள பட்டியல்

தாக்கல் செய்து அவருக்கு வீடு கட்ட பணம் கொடுக்கப்பட்டது என்றும் ஜாமீன் நான்தான் போட்டேன் என்றும் நான் குடும்ப செலவிற்கு பணம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல என்றும் நான் 20 பவுன் நகையை என் மனைவிக்கு வாங்கி கொடுத்ததற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றும் என் பெயருக்கும் என் மனைவி பெயருக்கும் இணை கணக்கு இருந்து ரூ.50,000 வைத்திருந்தேன் என்றும் அதை காட்டுவதற்கு நான் பாஸ்புக் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த பாஸ்புக்கை என் மனைவி எடுத்துச் சென்றுவிட்டார் என்றும் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல என்றும் நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டதல்ல என்றும் அனைத்தும் ஜோதி பெயருக்கு உள்ளது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

WEB COPY

12) வா.சா.2 – கட்டிட ஒப்பந்தக்காரராக பணிபுரிந்து வருவதாகவும் வாதி ராணுவத்தில் வேலை செய்கிறார் என்றும் 2000ல் வீடு கட்ட பேசி 2003ல் வீடு கட்டி முடிக்கப்பட்டது என்றும் சதுர அடி ரூ.3200 என்றும் கட்டுமான பொருட்கள் வாதி வாங்கி கொடுத்தார் என்றும் கூலியும் வாதிதான் கொடுத்தார் என்றும் வீடு கட்டியதற்கான வரவு செலவு டைரியை தாக்கல் செய்வதாகவும் முதல் விசாரணையின்போது சாட்சியமளித்து குறுக்கு விசாரணையின்போது எனக்கு நிலம் எதுவும் இல்லை என்றும் கட்டிடம் கட்டுவதற்கு லைசென்ஸ் இல்லை என்றும் பொதுவாக வீடு கட்டினால் வீட்டு உரிமையாளரை பார்ப்போம் கிரயப்பத்திரத்தை பார்க்க மாட்டோம் நான் வீடு கட்டிய இடம் ஜோதி பெயரில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது என்றும் நான் வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல என்றும் நான் தாக்கல் செய்த டைரி 1994ம் வருடம் என்றால் சரிதான் என்றும் அந்த டைரியில்தான் குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான் என்றும் எந்தெந்த வருடம் யார் யாருக்கு கட்டிடம் கட்டினேன் என்பதற்கு டைரியில் உள்ளது என்றும் இது போன்று பல டைரிகள் உள்ளன என்றும் டைரி என்னுடையதல்ல என்றால் சரியல்ல

என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) வா.சா.3 கிருஷ்ணகிரி கூட்டுறவு சங்கத்தில் பணிபுரிவதாகவும் தாவா சொத்தின்பேரில் அடமானக் கடன் கேட்டு வாதி அணுகியதாகவும் 1ம் பிரதிவாதியைத் தெரியும் என்றும் கடன் தொகையை வாதி அவர் நண்பர் மூலம் டி.டி.யாக வங்கிக்கு அனுப்புவார் என்றும் கடன் தொகையில் ரூ.1,89,000 நிலுவையில் உள்ளது என்றும் இந்த வங்கி கடன் தொடர்பாக வாதி தன்னுடைய சம்பளப் பட்டியலை செக்யூரிட்டிக்காக கொடுத்துள்ளார் என்றும் 2008ல் காமராஜ் என்பவரும் சமீபத்தில் காவல் ஆய்வாளர் ஒருவரும் கடன் தொடர்பாக வந்து கேட்டார்கள் என்றும் முதல் விசாரணையில் சாட்சியமளித்து குறுக்கு விசாரணையின்போது, கடன் பத்திரம் எங்கள் பாதுகாப்பில் உள்ளது என்றும் கிரய ஆவணத்தில் ஜோதியின் பெயர் உரிமையாளராக உள்ளது என்றால் சரிதான் என்றும் சட்ட கருத்துரை பெற்றுதான் கடன் வழங்கப்பட்டது என்றும் சட்டக் கருத்துரையில் பிரதிவாதி நிலத்தின் உரிமையாளர் அதை அடமானம் வைத்துக்கொண்டு கடன் வழங்கலாம் என்று கருத்துரை வழங்கப்பட்டிருந்தது என்றும் அடமானக் கடன் பத்திரம் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தார்கள் என்றும் கடனை திருப்பிச் செலுத்தியது 1ம் பிரதிவாதி என்றால் சரிதான் என்றும் டி.டி.யாக எங்களுக்கு பணம் வரவில்லை என்றும் அவர் நண்பர்களிடம் கொடுத்து அவர் நண்பர்கள் பணமாகத்தான் கொடுப்பர் என்றும் அந்த பணம் யார் கொடுத்தது என்று எனக்கு நேரிடையாகத் தெரியாது என்றும் வாதியின் நண்பர்கள் வாதி டி.டி.யாக கொடுத்ததாக எங்கள் அலுவலகத்தில் சொன்னார்கள் என்றும் பணம் கடன் தொகை முழுவதும் பிரதிவாதி மூலம் வந்தது என்றால் அது பற்றி தெரியாது என்றும் யார் பணம் கட்டினாலும் நாங்கள் வரவு வைத்துக்கொள்வோம் என்றும் அதற்கான ரசீதுகள் பணம் செலுத்துபவரிடம் கொடுத்துவிடுவோம் அதன் டூப்ளிகேட் அலுவலகத்தில் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14) வா.சா.4 வாதியின் மனைவிக்கு கிரயம் கொடுத்த நபர். 20.04.1995ல்

WEB COPY

வாதியுடன் தாவா சொத்து குறித்து கிரய ஒப்பந்தம் போட்டோம் என்றும் அதன்படி தாவா சொத்தினை வாதியின் வேண்டுகோளின்படி அவருடைய மனைவி பெயருக்கு கிரய பத்திரம் செய்துகொடுத்தோம் என்றும் அதற்கான கிரயத்தொகை வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டோம் என்றும் ரூ.55,000 பெற்றுக்கொண்டோம் என்றும் ரூ.27,500 என்று கிரயப்பத்திரம் எழுதியுள்ளோம் என்றும் பிரதிவாதியிடமிருந்து தொகை பெறவில்லை என்றும் முதல் விசாரணையில் சாட்சியமளித்து குறுக்கு விசாரணையின்போது, நான் எல்.ஐ.சி.ஏஜென்ட்டாக இருக்கிறேன் என்றும் நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியவாறு ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றும் வாதிக்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ளார்.

WEB COPY

15) பி.வா.சா.1 எதிர் வழக்குரையில் கூறியவற்றையே பிரமாண வாக்கு மூலத்தில் கூறி குறுக்கு விசாரணையின்போது, தாவா சொத்தை வா.சா.4டமிருந்து கிரயம் வாங்கினேன் என்றும் முதலில் கிரய ஒப்பந்தம் போட்டு அதன் பின்பு கிரயம் செய்தேன் என்றும் கிரய ஒப்பந்த தேதி ஞாபகமில்லை என்றும் வாதி கொடுத்த இளவர் சம்மந்தமான மனுவில் நான் மாவு மில்லுக்கு வேலை செய்ய போவதாகவம் வசதியில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும் வாதி என்னை சென்னைக்கு கூட்டிச் சென்றதாக சொல்லவில்லை என்றால் இந்த மனுவில் சென்னைக்கு கூட்டிச் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை என்றும் ஆரம்பத்தில் எனக்கும் வாதிக்கும் கூட்டு கணக்கு வங்கியில் இருந்தது என்றும் அதை அவர் வாங்கிச் சென்றுவிட்டார் என்றும் அந்த வங்கி கணக்குக்கு அவர் மிலிட்டரியில் பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல என்றும் வங்கியில் உள்ள கூட்டுக் கணக்கை பொறுத்து இருவரும் சேர்ந்து கையொப்பமிட்டால் கிடைக்கும் என்றால் சரிதான் என்றும் கூட்டுக் கணக்கிலிருந்து என் கையொப்பமில்லாமல் வாதி எந்த பணமும் எடுக்க முடியாது என்றால் சரியல்ல என்றும் பிரமாண வாக்கு மூலத்தில் எனது அண்ணார் வீடு கட்ட பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான் என்றும் வாதியுடைய அண்ணார் என் உடன் பிறந்த சகோதரியை திருமணம் செய்துகொண்டார் என்றும் என் அண்ணன் பி.டி.ஓ அலுவலகத்தில் ஸ்வீப்பர் வேலை செய்கிறார் என்றும் இளவர் மனுவில் நான் வீடு இருப்பதாக கூறவில்லை என்றால் சரியல்ல என்றும் பிரமாண வாக்குமூலத்தில் கிருஷ்ணகிரி கூட்டுறவு வங்கியில் ரூ.2 லட்சம் கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும் அதற்காக நானும் என் அக்கா வீட்டுக்காரரும் அந்த தொகையை செலுத்தியுள்ளோம் என்றும் அதற்கு ரசீது நான் தாக்கல் செய்யவில்லை என்றும் தவணை செலுத்தியதை புத்தகத்தில் வரவ வைத்து கொடுத்துள்ளார்கள் என்றும் இதுவரை 6,7 தவணைகள் கட்டியுள்ளோம் என்றும் கடன் வட்டி பாக்கி இன்னும் இருக்கிறது என்றும் என் சகோதரி என் அப்பா அம்மா ஆகியோர் துணையுடன் தாவா சொத்து கிரயம் வாங்கப்பட்டது பொய் என்றால் சரியல்ல என்றும் அசல் கிரய ஒப்பந்தம் வாதியிடம் உள்ளது என்றும் வாதி எந்த காலத்திலும் மாதாமாதம் பணம் அனுப்பவில்லை என்றும் வீடு என் பெயருக்கு வாதி ராணுவத்திலிருந்து என் பெயருக்கு கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல என்றும் என் அப்பா ஓய்வு பெற்றபோது வந்த பணம், கடன் பெற்ற பணம் ஆகியவற்றை கொண்டு வீட்டை கட்டினேன் என்றும் வீடு எத்தனை சதுர அடி என்று ஞாபகமில்லை என்றும் என் பெற்றோரும் சகோதரியும் உதவிசெய்யவில்லை என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ளார்.

WEB COPY

16) பி.வா.சா.2 வில்முரசு பத்திரிகை ஆசிரியர். கணவன் மனைவிக்கிடையே பிரச்சனை என்று கணவனால் அவதூறு செய்தி கொடுத்ததாக கூறி சாட்சியமளித்துள்ளார். பி.வா.சா.3 போட்டோக்களை வாதிதான் எடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். வழக்குரை சொத்து குறித்தோ, யாரால் வீடு கட்டப்பட்டது என்பது குறித்தோ பி.வா.சா.2,3ன் சாட்சியம் அமையவில்லை. பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் தனித்த சாட்சியம் மட்டுமே உள்ளது. தன்னுடைய சகோதரி, பெற்றோர் வீடு வாங்க உதவி செய்ததாகவும் நகைகளை விற்று வாங்கியதாகவும்

கூறினாலும் நகைகள் எவ்வளவு இருந்தது எங்கு விற்றார் என்பதற்கு சாட்சியமில்லாததாலும் பெற்றோர் சகோதரியை விசாரித்து அவர்கள் உதவி செய்ததாக அவர்கள் மூலம் சாட்சியமளிக்கப்படாததாலும் 1ம் பிரதிவாதி தரப்பு கூற்று 1ம் பிரதிவாதியால் நிரூபிக்கப்படவில்லை. மாறாக வாதி தரப்பில் கிரயம் கொடுத்தவரையும் கடன் தவணை பணத்தை செலுத்தியவரையும் விசாரித்து தவணை பணம் செலுத்தப்பட்டது குறித்தும் வாதிதான் கிரயப்பத்திரம் எழுதுவதற்கு கிரய ஒப்பந்தம் போட்டு 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரயம் வாங்கினார் என்பது வாதி தரப்பு சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வாதிக்கு பணத்தை செலுத்துவதற்கு வசதியுள்ளது என்பதை அவர் மிலிட்டரியில் வேலை செய்கிறார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து தெளிவாகிறது. வாதி பணமே அனுப்பவில்லை என்று 1ம் பிரதிவாதி கூறியுள்ளதும் கூட்டு கணக்கு இருந்ததாகவும் கூட்டுக்கணக்கிலிருந்து பணத்தை இருவரும் சேர்ந்து கையொப்பமிட்டால்தான் பெறமுடியும் என்று சாட்சியமளித்திருப்பதால் வாதி பிரதிவாதிக்கிடையே கூட்டுக் கணக்கு இருந்திருக்கிறது என்றும் 1ம் பிரதிவாதிக்கு வாதியால் ராணுவத்திலிருந்து பணம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகிறது. அதுபோன்று, 6,7 தவணை மட்டுமே செலுத்தியதாக 1ம் பிரதிவாதியால் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக வாதி தரப்பு சாட்சிகள் தவணை தொகையை தாங்கள் செலுத்தியதாக கூறியுள்ளார்கள். எனவே வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையில் வாதி அன்பின்பேரிலும் பாசத்தின் பேரிலும் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு கிரயம் பெற்றாலும் அவர் குடும்ப நலனுக்காகத்தான் கிரயம் பெற்றிருக்கிறார் என்பதும் அவர் கிரயம் பெற்ற காலத்தில் 1ம் பிரதிவாதி வீட்டிலிருந்து வெளியேறும்வரை ஒன்றாக குடியிருந்துள்ளார்கள் என்பதையும் தெளிவுபடுத்துவதாக உள்ளது. மேலும் வாதி ராணுவத்தில் இருந்ததால் வாதியால் கிரயப்பத்திரம் செய்வதற்கு அந்த இடத்தில் இல்லாத காரணத்தால் 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரயப்பத்திரம் செய்யப்பட்டுள்ளது என்பதைத்தான் வாய்மொழி

WEB COPY

சாட்சியங்கள் புலப்படுத்துவதாக உள்ளது. மேற்படி வாய்மொழி சாட்சியத்தை ஆவண சாட்சியங்கள் உறுதிப்படுத்துகிறதா என்று பார்க்கவேண்டும்.

17) அசல் கிரய ஆவணம் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் யார் கையில் அசல் கிரய ஆவணம் உள்ளது என்பதை தீர்மானிக்க முடியாது. வா.சா.ஆ.1 ஆனது கிரய ஆவணத்தின் புகைப்பட நகல் ஆகும். ஆதில் 1ம் பிரதிவாதி பெயருக்கு பணம் ரூ.27,000 பெற்றுக்கொண்டு கிரய செய்து கொண்டதாக காணப்படுகிறது. ஆனால் ரூ.55,000 பெற்றுக்கொண்டு ரூ.27,000 எழுதிக்கொடுத்து கிரயம் செய்ததாக வா.சா.4ஆல் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 வாதிக்கு கிரயம் கொடுத்தவருக்கு கிடைத்த கிரயப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகலாகும். வா.சா.ஆ.3,4 அடமான கடன் பத்திரமாகும். மேற்படி அடமான கடன் பத்திரங்கள் 1ம் பிரதிவாதியாலும் வாதியாலும் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதுபோன்று ரூ.2லட்சம் கடன் பெறப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. எனவே வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து அடமானம் எழுதிக்கொடுத்து வீட்டை கட்டுவதற்கு கடன் பெற்றிருக்கிறார்கள் என்பதை வா.சா.ஆ.4 உறுதிப்படுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.5 வழக்குரை சொத்துக்கான வில்லங்கச் சான்றாகும். அது யார் கிரயம் செய்தார் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.6 வீட்டுவரி. 1ம் பிரதிவாதியின் பெயருக்கு வாதியால் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.7 வரிசைகள் கூட்டுறவு வங்கியில் வங்கி கடன் செலுத்தப்பட்டு அதற்கு ரசீது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.8 – வங்கி கடன் கணக்கு புத்தகம் ஆகும். மேற்படி கடன் கணக்கு 1ம் பிரதிவாதி பெயருக்கு பெறப்பட்டிருக்கிறது என்பதையும் 2002லிருந்து 2010வரை தவணை தொகை செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் மீதி ரூ.1,89,000 நிலுவையில் உள்ளது என்பதையும் அதன் பின்பு தொகை செலுத்தப்படவில்லை என்பதையும்

WEB COPY

புலப்படுத்துவதாக உள்ளது. 1ம் பிரதிவாதியால் 6,7 தவணைகள் மட்டும் தவணை செலுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் அதற்கு ரசீதுகள் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக பல்வேறு தவணைகள் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை வா.சா.ஆ.8 உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலம் அதாரம் வாதியின் கையிலிருந்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதுவே 1ம் பிரதிவாதி தரப்பு கூற்றான 1ம் பிரதிவாதியால் தவணை செலுத்தப்பட்டது என்பதற்கு ரசீது தாக்கல் செய்யப்படாத காரணத்தால் 1ம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டதாக கூறப்பட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18) வா.சா.ஆ.13 மின் கட்டண ரசீதாகும். மின் கட்டண ரசீதுகள் சுமார் 70 ரசீதுகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.14 8.07.2008ல் வீடு சுவாதீன போக்கிய ஒப்பந்த பத்திரம். வாதியால் வேறு நபர்களுக்கு எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. எனவே வாதியால் தன்னுடைய சொந்த வீடு என்று கருதி வீடு சுவாதீன போக்கிய ஒப்பந்தம் போட்டு தாவா சொத்து அனுபவிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை வா.சா.ஆ.14 புலப்படுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.15 வீட்டுவரி தீர்வை ரசீதுகள் வரிசை வாதியால் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை புலப்படுத்துவதாக உள்ளது. 7 ரசீதுகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.16 1ம் பிரதிவாதி பெயருக்கு பெறப்பட்ட புது வீடு கட்டுவதற்கான கடன் விண்ணப்பம் ஆகும். வா.சா.ஆ.17 வாதியால் தவணை தொகை செலுத்தியதற்கான ரசீது வாதியால் 1ம் பிரதிவாதியின் பெயரிலும் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை புலப்படுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.9 இளவர் மனு வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை புலப்படுத்துவதாக உள்ளது. வா.சா.ஆ.10 சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி மனுதாரராக இருந்து விவாகரத்து மனு தாக்கல் செய்து விவாகரத்து பெற்றிருக்கிறார் என்பதை புலப்படுத்துவதாக உள்ளது. அதில் மனுதாரரான 1ம் பிரதிவாதியால் மார்ச் 2007 வரை இந்த வாதி 1ம் பிரதிவாதிக்கு

WEB COPY

பணம் அனுப்பியிருந்ததாகவும் அதன் பின்பு எந்த பணமும் அனுப்பவில்லை என்றும் இந்த 1ம் பிரதிவாதி சென்னையிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஒன்றரை வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. வாதியால் எந்த பணமும் அனுப்பவில்லை என்று 1ம் பிரதிவாதியால் கூறப்பட்டபோதிலும் வா.சா.ஆ.10 குடும்ப நல நீதிமன்ற உத்தரவு 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்ட ஒருதரப்பு உத்தரவில் 2007 மார்ச் வரை வாதி பணம் அனுப்பியிருக்கிறார் என்பது 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் தற்போது அதை ஒப்புக்கொண்டால் வீட்டுக்கான கிரயத்தொகை வாதியால் கொடுக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுவிடும் என்பதால் 1ம் பிரதிவாதியால் மறுக்கப்படுகிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEB COPY

19) வா.சா.ஆ.11 1994ம் ஆண்டு டைரியின் ஒருபக்கம். ஆதில் வீடு கட்டுவதற்கான செலவு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு எழுதப்பட்டிருக்கிறது என்பதை புலப்படுத்துவதாக உள்ளது. அது குறித்து வா.சா.2 1994ம் அண்டு டைரியில் எழுதப்பட்ட காரணத்திற்காக பின்னால் இந்த வழக்கு ஏற்படும் என்று தெரிந்தே எழுதினார் என்றும் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றும் தீர்மானிக்க முடியாது. வா.சா.ஆ.12, வா.சா.2 கட்டிட தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார் என்பதை தெளிவாக்குகிறது.

20) பி.வா.சா.1 ஆனது 1ம் பிரதிவாதி மனுதாரராக, வாதி எதிர்மனுதாரராக இருந்து குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நகலாகும். மேற்படி மனுவில் 2007க்குப் பின்பு 1ம் பிரதிவாதி தொடர்புகொள்ளவில்லை என்றும் எந்த பணமும் அனுப்பவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே பி.வா.சா.ஆ.1 2007 மார்ச் வரை 1ம் பிரதிவாதிக்கு வாதி பணம் அனுப்பியிருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அவ்வாறு பணம் அனுப்பாவிட்டால் திருமணமானதிலிருந்தே வாதி 1ம் பிரதிவாதிக்கு பணம்

அனுப்பவில்லை என்று கூறப்பட்டிருக்கும். பி.வா.சா.ஆ.2 – பாதுகாவலர் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. மேற்படி உத்தரவில் வாதி வேறொரு திருமணம் செய்ததால் ஏற்கனவே வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்குமிடையே விவாகரத்து ஏற்பட்டுவிட்டதால் குழந்தைகளும் 1ம் பிரதிவாதியின் பொறுப்பில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரான வாதி ராணுவத்தில் பணிபுரிந்து 1ம் எதிர்மனுதாரருக்கும் குழந்தைகளுக்கும் பணம் அனுப்பி வைத்ததாகவும் எதிர்மனுதாரர் மீதுள்ள அன்பினாலும் பாசத்தினாலும் வீட்டு மனையை வாங்கி கடன் பெற்று வீடு கட்டியதாகவும் கூறப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அது போன்று 2வது குழந்தையான இளவர் தினேஷ்குமாருக்கு ஜீவனாம்சம் வழங்கவேண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கு வாதி கொடுத்துவருவது 1ம் பிரதிவாதியால் மறுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் கூலி வேலை செய்து வந்தாலும் குழந்தையை பராமரித்துக்கொள்வார் என்று கூறித்தான் குழந்தையை 1ம் பிரதிவாதி பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆது போன்று மேற்படி தீர்ப்பில் 3 ஆண்டுகளாக 1ம் பிரதிவாதிதான் குழந்தைகளுக்கான படிப்பு செலவை செய்துவருகிறார் என்றும் விவாகரத்தான பின்பு மனைவி குழந்தைகளுக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்று ஒப்புக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பி.வா.சா.ஆ.2ம் விவாகரத்து ஆகும்வரை 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டப்படி 2007 மார்ச் வரை 1ம் பிரதிவாதிக்கு வாதி ராணுவத்திலிருந்து தொகை செலுத்தி வந்திருக்கிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3,4 நாளிதழில் 1ம் பிரதிவாதி வேறு நபருடன் தொடர்பு இருப்பதாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அது வாதியால் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் புலப்படுத்துவதாக உள்ளது. 1ம் பிரதிவாதியின் ஒழுக்கத்தை குறித்து வாதியால் தவறாக நாளிதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் அதற்காக தனியாக 1ம் பிரதிவாதி நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க

WEB COPY

வேண்டுமே தவிர வழக்கு சொத்து அவரால் கிரயம் பெறவில்லை என்று முடிவு செய்யமுடியாது. இந்த வழக்கு சுவாதீனம் சம்மந்தப்பட்ட வழக்கு என்பதால் இன்றுவரை 1ம் பிரதிவாதியால் அவருக்கு வீடு வாங்குவதற்கு போதிய வசதி இருந்தது என்பதற்கோ, பெற்றோர் பணம் கொடுத்தனர் என்பதற்கோ வாதியின் சகோதரர் பணம் கொடுத்தார் என்பதற்கோ 1ம் பிரதிவாதியின் சகோதரி பணம் கொடுத்தார் என்பதற்கோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுபோன்று கடன் வாங்கியதை 1ம் பிரதிவாதியும் வாதியும் சேர்ந்து வாங்கியிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டபோதிலும் கடன் தொகையை செலுத்தியது வாதியின் நண்பர் என்பது வா.சா.3ன் மூலம் வாதி தரப்பு ஆவணங்கள் மூலமும் நிரூபிக்கப்பட்டபோதிலும் 1ம் பிரதிவாதியால் தவணை தொகை தன்னால் செலுத்தப்பட்டது என்பதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்யப்படவில்லை. கிரய ஒப்பந்தம் 1995ல் இந்த வாதியால் போடப்பட்டிருக்கிறது என்பதையும் அதன் பின்பு வீடு போக்கிய பத்திரம் இந்த வாதியால் தன்னுடைய வீடு என்று கூறி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் வாதி தரப்பு சான்றாவணங்கள் புலப்படுத்துவதாக உள்ளது. 2007வுரை வாதியால் பணம் செலுத்தப்பட்டதாக 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மின்வாரிய ரசீது வீட்டு வரி ரசீது வாதியால் 1ம் பிரதிவாதி பெயருக்கு செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் வாதி தரப்பு சான்றாவணங்கள் உறுதிப்படுத்துவதாக உள்ளது. வாதி தரப்பு வாய்மொழி சாட்சிகளின் சாட்சியங்களை ஆவண சாட்சியம் உறுதிப்படுத்துவதாக உள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பு கூற்றை வேறு வாய்மொழி சாட்சியமோ ஆவண சாட்சியமோ உறுதிப்படுத்துவதாக இல்லை. அன்பின்பேரிலும் பாசத்தின்பேரிலும் வாங்கியதால் மனைவி பெயருக்கு வாங்கப்பட்டிருந்தால் அது மனைவிக்கு உரிமையானது என்று 1ம் பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டபோதிலும் வாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட தீர்முடிவு இருநீதியரசர்களால் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்வில் அன்பின்பேரிலும் பாசத்தின் பேரிலும் வாங்கப்பட்டிருந்தாலும் தொகை வாதியால்

WEB COPY

கொடுக்கப்பட்டிருந்தால் குடும்பத்தினர் கிரயம் வாங்கிய பின்பு குடியிருந்து வந்திருந்தால் அவர் மனைவியின் நலனுக்காக மேற்படி சொத்தை கிரயம் வாங்கியதாக தீர்மானிக்க முடியாது என்றும் குடும்ப நலனுக்காக கிரயம் பெற்றிருக்கிறார் என்றுதான் கருதப்படவேண்டும் என்றும் அதன் காரணமாக வழக்குரை சொத்து வாதியால் கிரயம் பெறப்பட்டுள்ளது என்பதை கருத்திற்கொண்டு முடிவு செய்யப்பட்டிருப்பதால் இந்த வழக்கிலும் அது போன்றே வாதியால் மனைவியின் மீதுள்ள அன்பின்பேரிலும் பாசத்தின்பேரிலும் வாங்கினாலும் குடும்ப நலனுக்காக வாங்கப்பட்டதால் அவர் ராணுவத்தில் இருந்ததால் அவரால் தொகை அனுப்பப்பட்டு 1ம் பிரதிவாதி பெயருக்கு கடன் தொகை செலுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் மின்கட்டணம் வீட்டுவரி அவரால் செலுத்தப்பட்டிருப்பதால் 1ம் பிரதிவாதிக்கு எந்த வசதியுமில்லாத காரணத்தால் அவர் பெற்றோர் சகோதரி செலவு செய்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லாத காரணத்தால் 1ம் பிரதிவாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு ஒரு நீதியரசரால் பிறப்பிக்கப்பட்டது என்பதாலும் வாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்முடிவு இருநீதியரசர்களால் பிறப்பிக்கப்பட்டது என்பதாலும் அது பிந்தைய தீர்முடிவு என்பதாலும் அதனடிப்படையில் வழக்குரை சொத்து வாதியால் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு மலரணையாக பெறப்பட்டுள்ளது என்றும் வாதிதான் உண்மையான உரிமையாளர் என்றும் அதன் காரணமாக வாதியால் சுயார்ஜிதமாக 1ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்து கிரயம் பெறப்பட்டுள்ளது என்றும் தாவா வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்தும் 1,2 பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

WEB COPY

3ம் பிரச்சனைக்கான பரிசீலனையும் தீர்வும்

21) வழக்குரை சொத்து வாதிக்கு உரிமைப்பட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் 1ம் பிரதிவாதி அதை வேறு நபருக்கு விற்பதற்கு முயற்சி செய்வதாக கூறப்பட்டுள்ளதால் அவ்வாறு விற்பனை செய்வதற்கு வாய்ப்பு இருப்பதால் உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கினால் 1ம் பிரதிவாதிக்கு எந்த

கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும் மாறாக உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்காவிடில் வாதிக்குத்தான் கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று தீர்மானித்து சமச்சீர் வாய்ப்பும் வாதிக்கு சாதகமாக இருக்கிற காரணத்தாலும் வாதி பிராதில் கோரியபடி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற உரியவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

<u>4ம் பிரச்சனைக்கான பரிசீலனையும் தீர்வும்:</u>

22) கீழமை நீதிமன்றம் அனைத்தையும் கருத்திற்கொண்டு வாதி பிராதில் கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானித்திருப்பதால் மேற்படி முடிவில் எந்த சட்டத் தவறோ பொருண்மைத் தவறோ இல்லாத காரணத்தால் கீழமை நீதிமன்ற தீர்ப்பிலும் தீர்ப்பாணையிலும் தலையிடுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லாத காரணத்தால் இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கீழமை நீதிமன்ற தீர்ப்பும் தீர்ப்பாணையும் உறுதி செய்யத்தக்கது என்றும் தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு மேல்முறையீட்டுக்கான செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மேற்கண்ட பிரச்சனைக்குத் தீர்வு காண்கிறது.

WEB COPY

முடிவில் இந்த மேல்முறையீடானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு அசல் வழக்கு 109/2008ல் 14.12.2015 அன்று கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பும் தீர்ப்பாணையும் உறுதி செய்யப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சிற்கு மாற்றப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரிபார்க்கப்பட்டு 2017ம் ஆண்டு ஜூன் திங்கள் 12ம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி
கிருஷ்ணகிரி.